No 80

25

# அமரர் எதிர்மன்னசிங்கம்

(வாழ்க்கை வரலாறு)

**1ம் பாகம்**

S.U.E.

## A Biography of S.U.ETHIRMANNASINGHAM M.B.E. J.P.

**PART 1.**

ஆசிரியர்:

★

பூரடம்.

★ ★

வெளியீடு இல:- 39.

# அமரர் எதிர்மன்னசிங்கம்

(வாழ்க்கை வரலாறு)

Iம் பாகம்.

# A Biography of S.U.ETHIRMANNASINGHAM M.B.E. J.P.

## PART 1.

ஆசிரியர்: பூராடம்.

ஜீவா பதிப்பகம்
பிரதான வீதி, தேற்ருத்தீவு
களுவாஞ்சிகுடி த.நி.

JEEVA PUBLISHERS.
Main Street, THETATIVU
Kaluwanchikudi P. O.

1ம் பதிப்பு: செப் 1969
1000 பிரதிகள்

(பதிப்புரிமை பதிப்பகத்தாருக்கே)

அச்சிட்டது:
**மனோகரா அச்சகம்**
தேற்றாத்தீவு, களுவாஞ்சிகுடி. த.நி.



# பதிப்பகத்தாருரை.

அன்புடையீர்,

எங்களது 30ம் வெளியீடாக ஈழத்தைப் பாரறியச் செய்த இரும்பு அரசன் அவர்களது வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டோம். பட்டிருப்புத் தொகுதியைப் பாரறியச் செய்த திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இப்போது வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம்.

அரசியலறிஞனை இவரின் கருத்துகளில் பொதிந்துள்ள உண்மை காலத்தால் அழியாதன. இந்நூலை இவரது சிராத்ததின வெளியீடாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறேன். ''நல்லவரை நாடு மறவாது,, என்பதுஇந் நூல்வெளிவரும் முயற்சியால் உண்மையாகிறது: எங்கள் 38 நூல்களையும் ஆதரித்த பெருமக்கள் இதனையும் ஆதரிப்பார்கள் என்பது எங்கள் எண்ணம். இவ்வெண்ணம்நிறைவேற இறைவன் அருள்பாலிப்பாராக.

ஜீவா பதிப்பகம்,
12.6.69.

நா.சா.கதிராமத்தம்பி,
உரிமையாளர்.

# சமர்ப்பணம்.

இந் நூலைத்
திரு.எதிர்மன்னசிங்கம் M B E. J.P.
அவரது அரசியல் வாழ்விலுற்ற
வழிகாட்டியாக இருந்த
**புலவர்மணி. ஏ.பெரியதம்பிப்பிள்ளை**
பண்டிதர் அவர்களுக்குச்
சமர்ப்பணம் செய்கிறோம்.

## அதிகாரங்கள்.

### 1ம் பாகம்.


| | | |
|---|---|---|
| 1. | திருநாள் | 1 |
| 2. | அரசியலறிஞன் | 8 |
| 3. | கனவுகள் | 22 |
| 4. | ஜனநாயகவாதி | 28 |


## 1ம் அதிகாரம்.



# திருநாள்.

"8.7.1915." இத்தினத்தில் உலகின் பல பாகங்களிலும் பல பல சம்பவங்கள் நடைபெற்றதாக வரலாறு கூறுகின்றது. அவற்றுள் சில பின்வருமாறு:-

1. தென்மேற்கு ஆபிரிக்காவை சேர்மனியர் ஆட்கொண்டமை.
2. முதன் முதலாக சேர்மனியர் நீர்மூழ்கிக் கப்பலால் கோலன்ட் என்னும் பிரித்தானியக் கப்பலை மூழ்கடித்தமை.

ஆனல் இவைகளெல்லாம் பட்டிருபபுத் தொகுதியைப் பொறுத்தமட்டில் அவ்வளவு முக்கியமானவையல்ல ஆயினும், இத்தினம் பட்டிருப்புத் தொகுதியில் பொன்னெழுத்துக்

களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியமானதொரு தினமாகும்.

அரசியல் அநாதையாக, அரசாங்கமெனும் வருணன் புறக்கணித்த பாலைவனமாக அல்லற்பட்டு எத்துறையிலும், ஆதரவின்றி பின் தங்கியிருந்த காலத்தில்; கைகொடுத்து நிலைமையை மாற்றி அமைத்து அகில இலங்கை முழுவதிலும், பட்டிருப்பு தொகுதியிலும் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் ஐயறிவு படைத்தவர்களல்ல. ஆறறிவு படைத்த மனிதர்கள்தான், அவர்களுக்கும் பல வாழ்க்கைக்கான வசதிகள் தேவை. அவற்றைப்பெற அவர்களுக்கு அரசியலுரிமை தேவை என்னும் குரலெழுப்பி, செயலாற்றிக் குறை தீர்க்க வந்த ஒரு தீபம் எழுந்த திருநாள்.

எருவில் என்னும் கிராமத்தில் கதிரமலைப்போடி உடையார் சோமசுந்தர உடையாருக்கும் தம்பிமுத்து கற்பகப்பிள்ளை அம்மையாருக்கும் இத்தினத்தில் ஒரு மகவாகப் பிறந்து ஒளிச்சுடராக திகழ்ந்த திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் அவர்கள் அவதரித்ததினம் இந்த நாள்தான்.

பட்டிருப்புத் தொகுதி, மன்னர் குலத்திற்கும் மாணிக்கம் பரம்பரைக்கும் தாயடி மூதிசமா? என்று பலர் குரலெழுப்புவது நாமறிந்



ததே. இது இப்போது நியாயமாய்த் தொனித்தாலும் 1947ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த சூழ்நிலையைக் கவனிக்கும்போது மிகு விநோதமாகத் தோன்றும்.

மட்டக்களப்பின் வடக்கில் நல்லையா மாஸ்டர் தெற்கில் தருமரெத்தினம் முதலியார், இடையில் பட்டிருப்புத்தொகுதி மக்கள். அதுவும் அங்கொன்று இங்கொன்றுமாகச் சில ஆசிரியர்கள், ஒரு சில அரசாங்க ஊழியர்கள், இத்தனைதான் பட்டிருப்புத்தொகுதியின் திரவ உருவிலான மூலதனம். அதேதருணம் பாழடைந்த பரந்த வயல்கள், துண்டிக்கப்படாத தொடர்பற்ற கிராமங்கள் அக்கரை, இக்கரை எனப்பிரித்துவைத்துள்ள மட்டக்களப்பு உப்புநீர் வாவி. பண்பும், அன்பும், பழைய கலாச்சாரங்களும் மிகுந்த கிராமியப் பண்பாடு. இத்தனைதான் இங்குள்ள திடவ ரூபத்திலான மூலதனம்.

எங்கும் காணக்கூடியது வறுமையின் கோலம். காணற்கரியது வசதியான வாழ்க்கை. அரசாங்கத்திற்கும், இங்குவாழ் மக்களுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது தெரியுமா? விதானை, அவரிலும் பெரியவர் உடையார். சகல அதிகாரங்களும் உள்ளவர் வன்னியனார். ஆண்டுக்கொரு தடவை அரசாங்க அதிபரின் பவனி. இத்தனைக்கும் ஈடு கொடுக்க வேண்

டியது மக்கள் கடமை. வருத்தும் பண்புள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

இக்காலத்தில் கல்முனை உயர் ஆங்கிக் கல்லூரியில் விவேகமிக்க மாணவனாகக் கற்ற திரு எதிர்மன்னசிங்கம் அவர்கள், தம் சமூக மக்களுடைய நலன்களில் தன கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார். கல்லூரிக் கல்வி கற்கக் கூடிய விவேகமும், பண வசதியும், ஆசிரியர்களின் மதிப்பும் இருந்தும் அன்னாரின் கவனம் பாடசாலைக் காலத்திலே தனது சூழலில் உள்ள மக்களின் குறைகளை தீர்ப்பதெப்படி? என்ற நினைவிலேயே சென்றது. இதுவே அவருக்கு உகந்ததுமாயிற்று. அதற்கான கல்லூரியாகத் தனது சூழலை மாற்றிக் கொண்டார். இங்கே தான் இவரது அரசியலறிவு வளர்ந்தது. அனுபவமே சிறந்த ஆசானாகக் கொண்டு கற்ற அரசியலறிவு இவரை எங்கும் ஓர் புரட்சியாளனாகத் தோற்றுவித்தது. மன்னரிடம் அழகான கையெழுத்து, அழகான சுருக்கமான பேச்சு, கிண்டலும், நகைச்சுவையும் ததும்பும் சிந்தனை துளிகள் இத்தனையும் ஆங்கிலத்தில் மாத்திரமல்ல தாய்மொழியான தமிழிலும் சகோதர மொழியான சிங்களத்திலும் முடியும். எத்தனையோ முறைகள் சிங்களப் பிரமுகர்களுடன் பேசும்போது, சிங்களத்தில்பிறர் வியக்கத்தக்கதாகப் பேசியதை காதாரக்கேட்ட வாய்ப்பு, எனக்கு மாத்திரமல்ல உங்களில் பலருக்கும் கிடைத்திருக்கலாம்.



கற்கும் திறனிருந்தும் கல்வியை முடித்துக் கொண்டு, உத்தியோகம் பெறப் பல வாய்ப்புகளிருந்தும் அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மக்களுடன் மக்களாகச் சீவித்து அவர்களின் இன்ப துன்பங்களை ஏற்கும் முயற்சியில் இறங்கினார். இதன் காரணமகா அதிக சிரமமின்றி தனக்குக் கிடைத்த பால் நிலையங்களின் மேற்பார்வையாளர் பதவியைக்கூட உதறித் தள்ளி விட்டு அரசியலில் புகுந்து ஒரு தீபமாக விளங்கினார்.

ஒரு வேளை தனது நண்பர் ஒருவரின் உத்தியோக விடயமாக அரசாங்க சபைப் பிரதிநிதி திரு. தருமரெத்தினம் முதலியாரைக் காணக் கொழும்புக்குச் சென்றிருந்தார். அது மிகச் சிரமமான காரியமாக இருந்தது. பல தினங்கள் கொழும்பில் தங்கியிருந்தும் வந்த காரியம் காயாகவேயிருந்தது. சோர்வுடன் அரசாங்க சபைபபடியில் நின்று கொண்டிருந்தார். அத்தருணம் கலாநிதி W.W. தகாநாயகா அவர்கள் இவரைக் கண்டு, என்ன காரியம் எனக் கேட்டார். தான் வந்த விடயத்தையும் அது முடியவில்லையெனவும் சோர்வுடன் கூறினார். உடனே அவர் ''தம்பி! உனக்குஏழைகளை, கல்வியறிவில்லாதவர்களைக் கண்டால் பிடிக்குமா?'' என்று கேட்டார். ஆம் ஐயா! அவர்கள்தான் எனது தோழர்கள், என்று பதிலிறுத்தார். சரி அவர்கள் சந்தோஷமாக இருப்பதை நீர் விரும்புகிறீரா? என்று கேட்டார் திரு தகாநாயகா அவர்கள், ''அதுவே எனக்கு மிகவும் விருப்பமான

காரியம்' என்றார் திரு.எதிர்மன்னசிங்கம் அவர்கள் அப்படியானால் ஏன் நீயுமொரு தருமரெத்தினமாக வரக்கூடாது? நீயேன் தருமரெத்தினத்தைத் தேடியலைய வேண்டும்? மக்களுக்குத் தொண்டு செய்யும் விருப்பமிருந்தால் ஏன் தருமரெத்தினத்தைப் போல் வரக்கூடாது என்றார்.

அதெப்படி ஐயா முடியும்? என்று மன்னர் அவர்கள் கேட்க, ஏன் முடியாது? நானும் உன்னைப்போல் ஒருவன் தான். காலியில் பிறந்து வளர்ந்தவனான நான் எவ்வளவோ தூரத்துக்கு அப்பாலுள்ள மலைப் பிரதேச மக்களின் பிரதிநிதியாக இருக்கின்றேன். பிறந்து வளர்ந்த பகுதியிலே இவ்வளவு ஆர்வமும் இளமையும் உள்ள உன்னால் முடியாதா? என்றார் திரு.தகா அவர்கள். சரி ஐயா; இதோ நான் முதலாம் படியில் காலடி எடுத்து வைத்துவிட்டேன் முயலுவேன் என்று கூறியதும், முயற்சி செய். உன் திறமையை வெளிக்காட்டு இனிமேல் ஏதாவது தேவையானால் என்னைக் காண் என்று கூறிப்பிரிந்தார்.

இந்நிகழ்ச்சிகள் அன்னாரின் மனதில் இடம் பெற்ற சமுகத் தொண்டைப் பெருமளவில் செய்ய தூண்டியது இவ்வாறு தன் அயல் கிராமங்களில் வசிக்கும் மக்கள் அரசியல் உரிமைகளை வசதிகளைப் பெறத் தூண்டிய திரு,எதிர்மன்னர் குலத்திற்கு இது ஒரு தாயடி முதுசம் எனக் கூறுவோமானால் அதன் தரம் மிகக் குறைவே



எனவே தனது உயிர்த்தோழர்களான மக்களின் முதுசம் எனக் கூறுவதே சாலப் பொருந்தும்.

ஆயிரம் ஆயிரம் பேர் இனிமேல் சந்திரனில் காலடி எடுதுத்வைக்கலாம். ஆனால் சந்திரனில் முதல் காலடி வைத்த ஆம்ஸ்ரோங், அல்ட்றின் ஆகியோருக்குக் கிடைத்த பெருமையும், உரிமையும் மற்றவர்களுக்குக் கிடைக்காதல்லவா?

எனவே பட்டிருப்புத் தொகுதியில் உள்ள கிராமங்களில் [1947ல் இருந்தபடி] வசிக்கும் மக்களின் உரிமைகளைப் பெற, முதலடி நாடாளுமன்றத்தில் வைத்து திரு.மொலமுரே அவர்களைச் சபாநாயகராக அனுமதித்து, பட்டிருப்பின் பெயரைப் பலரறியச்செய்த திரு.எஸ்.யூ.எதிர்மன்னசிங்கம் அவர்கள் பிறந்த பெருநாள் பட்டிருப்புத தொகுதிக்கு ஒரு திருநாளே.



# 2ம் அதிகாரம்



# அரசியலறிஞன்.

சோக்கிரட்டீஸ் காலத்திலே அரசியல் அறிவுககலை உச்ச நிலையடைந்ததாக மேல்நாட்டார் கூறிக்கொள்கிறார்கள். கௌடல்யரின் காலத்தில் உச்சம் பெற்றதாகக் கீழ் நாட்டவர் கூறிக்கொள்கின்றனர். வள்ளுவர் என்கிறது தமிழகம்.

இதற்கிடையில் ஆயிரமாயிரம் அரசியல் விற்பனர்கள் வாழ்ந்து பலவித அரசியலறிவு புகட்டிச் சென்றுள்ளார்கள். இத்தனைக்கும் விசேடமென்னவென்றால் இவர்களில் எவராவது அரசியலை ஒருபாடமாகக் கற்றுப் பட்டம் பெற்றவர்களல்ல.

அவர்கள் நமது சூழலில் தமது காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள்? எப்படி வாழ



வேண்டும்? அதற்கான குறைகளை எப்படி மாற்றியமைக்கலாம்? என அனுபவித்துத் தீர ஆலோசித்தார்கள். பல முடிவுகளைக் கண்டார்கள். தம் கருத்தை எடுத்துக் கூறினர். அவை நல்லதாக இருந்ததால் நாடு ஏற்றுக் கொண்டது. நாளடைவில் அரசியல் அறிஞர் என்னும் புகழ் கிடைத்தது.

இவ்வாறாகவே திரு. எஸ். யூ. எதிர்மன்ன சிங்கம் அவர்களும் அரசியலறிஞரானார்.

அன்னார் அரசியலைப் பாடமாக நெட்டுருச் செய்யவில்லை. படித்துப் பல தடவைகள் தவறவோ, ஒரு தடவையில் சித்தி பெறவோ இல்லை. ஏனெனில் 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பது அவரது நோக்கமாக இருந்தது! ஆண்டவரும் அவரைப் பிறவியிலே அரசியலறிஞராக்க வேண்டுமென்று விரும்பினார் போலும்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர என்ன செய்ய வேண்டும்? அவ் வாழ்க்கைத்தரத்தை அவர்கள் பேணிக்காக்க அவர்களுக்கு வேண்டிய உதவி என்ன? என்பதைக் கணித்து அறிவது நானறிந்த அரசியலறிவு எனக்கூறிக்கொள்வார் அவர்

இவருடைய அரசியல் பிரவேசகாலத்தில் தமிழ் காங்கிரஸ்மிகவும் உன்னதமான இடத்

தை இலங்கைமக்களிடம் வகித்திருந்தது. அக்கட்சியில் அங்கத்தவராகும்படி பல முக்கிய பிரமுகர்கள் இவரை நிர்ப்பந்தித்தனர். ஆனால் அவர் அதில் சேரமறுத்துவிட்டார். அப்போது அவர் கூறிக்கொண்ட அரசியல் தீர்க்கதரிசனம் என்னவென்று தெரியுமா?

''நான் ஒரு சொக்கலால பீடிக்கம்பெனிக் கலண்டரில் ஒரு வாக்கியத்தை வாசிக்கநேர்ந்தது அதில் ''தன்பங்கு தாவென்ற தம்பியும் இன்புற்று வாழத் தமையனும் கொல்லாமல் கொல்லும் பிணி'' என எழுதியிருந்தது. அதுபோல் இலங்கையில் தன்பங்கு தாவென்கின்ற தம்பியாகத் தமிழர்கள் வசிக்கக்கூடாது. தம்பியுடன் இன்புற்று வாழாத் தமையர்களாகச் சிங்களவர்கள் வசிக்கக்கூடாது. தற்போதைய நிலையில் பங்குகேட்கும் தம்பி உள்ள கட்சியுடன் இணைவது அவ்வளவு உசிதமாக இல்லை.

வீட்டில் நடப்பதுபோலத்தான் நாட்டிலும் நடக்கின்றது: நமது குடும்பங்களிடையே சச்சரவுகள் வந்துவிட்டால் எவ்வளவு ஐக்கியமின்மையும், துன்பங்களும் ஏற்படுக்கின்றனவென்று தெரியுமா? அதைக் கொண்டுதான் நமது நாட்டிற்குப் பிரிவினைக்கொள்கை கூடாதென்கிறேன்; என்றார்.



இதே விதமாகத் தமிழரசுக் கட்சி தமது ஆரம்பகாலப் பிரசாரங்களைச்செய்த காலத்தில் இவர் அக்கட்சியின் கூட்டங்களில் கலந்துகொண்டுவந்தார். ஆனால் அதில் அவர் ஓர் அவதானியாக இருந்தாரே தவிர ஆதரவாளனாகவல்ல. அப்போது இவரின் அரசியல் போட்டியாளராக திரு,எஸ்.எம். இராசமாணிக்கம் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகவிருந்தார். தமிழரசுப் பிரசாரக் கூட்டம் பட்டிருப்புத் தொகுதியில் முதன் முதலாக களுதாவளையில் கூடிற்று. அக்கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக இருந்த அத்தனைபேரும் திரு.எஸ்.எம்.இராசமாணிக்கம் அவர்களைத் தாக்கிப்பேசினர். ஓர்விசேடமென்னவெனில இக்கூட்டத்தை நடாத்த ஒழுங்கு செய்த திரு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் அங்கே பிரசன்னமாயிருக்கவில்லை.

இரண்டொரு தினங்களில் நான் அவரைச் சந்தித்து இது பற்றிய விபரத்தினையும் பிரசன்னமாகாத காரணத்தையும் வினவினேன். அவர் அன்று சமயோசிதமாகக் கூறியபதில் இற்றைவரை தமிழரசுக் கட்சியினர் அளவில் உண்மையாக, எள்ளத்தனையும் தவறாது கண்முன் நடந்து வருவதைக் காணும்போது ஹோம்ஸ் எங்கே? லொக் எங்கே? லெனின் எங்கே? நேரு எங்கே? எனவதிசயப்பட வேண்டியிருக்கிறது.

மன்னர் கூறிய தீர்க்கதரிசனம் இதுவே:

ஒன்றிலிருந்து ஒன்று பிரிகின்றபோது சில அம்சங்கள் பிரிந்ததில் சேர்வது வழக்கம். பூவரசந் தடிக்குப் பூவரசமரத்தின் குணமிருப்பது இயற்கைதானே! அதே போல் தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து வளரும் இக்கட்சிக்கு அதன் மூலகுணங்கள். அதாவது தன்பங்கு தாவென்ற தம்பிக் குணமிருப்பது இயற்கை. அத்துடன் இதற்கு ஒரு முக்கியவம்சம் இருக்குமெனவுஞ் சினேன். கருதாவளையில் நடைபெற்ற கூட்டத்திலது தெளிவாகிவிட்டது. தங்கள் எதிரிகளை வசை பாடித் தாக்குவதுதானது.

மேலும் இவர்களிடம் பஞ்ச தந்திரமென்பது கிடையாது. ஆரம்பத்தில் தடியெடுக்கும் திட்டங்கள் பகையை வலுப்படுத்துமே தவிர, நாட்டை வளப்படுத்தாது. (இந்த வேளையில் அடுத்த வீட்டுக்காரர் ஒருவரின் கதையைக் கூறி) பஞ்ச தந்திரத்தில் கடைசி ஆயுதமான தண்டம் பாவிக்கப்பட்டால் வெற்றி கிட்ட வேண்டும். இல்லையேல் எப்படி மனிதரின் கண்ணில் விழிப்பது? இது போல பல ஒவ்வாத அம்சங்கள். இக் கட்சியினவதானியாகவே இருக்கிறேனே ஒழிய ஆதரவாளனாகவல்ல என்றார்.

ஒன்று மட்டும் நிச்சயம். இவர்களின் கைவலுப் பெற்றோங்குமானால் கடைசியில் இவர்களை நம்பியவர்களுக்கு மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள அத்தனை தமிழருக்கும் கிட்டுவது



ஏமாற்றம். கிட்டாது இருக்கப்போவது அரசியல் சுதந்திரம் என்றார்.

உண்மைதான். மாவட்டசபை மாவட்டமாகிவிட்டது. தனித் தமிழ் மொழி இயக்கம தனித்து நிற்கமுடியாமல் தவணை கேட்டுச் சிங்களம் படிக்கும் இயக்கமாகிவிட்டது, அது தருவேன், இது தருவேன் என்றோர் ஆளும் கட்சியோடு கூடச்சேர்ந்து ஆனமான எதையும் செய்யாது ஆழமறியாமல் காலை விட்டுவிட்டோமென்கிறார்கள். இந்தத் தமிழரசு நாடகத்தைப் பார்க்கும்போது அவர்களால் வருணிக்கப்பட்ட எட்டப்பன் அவர்களுக்கு எட்டப்பனாக, அவர்களின் கபடத்தை! எடுத்துக்காட்டிய எட்டப்பனாக, காக்கை வன்னியனாக இருந்தாரே தவிர இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அல்ல என்பதை நாம் இன்று நிமிர்ந்து நின்று ஆதாரம் காட்டிப் பேசக்கூடியதாகவிருக்கிறது. அவ்வளவு தீர்க்கதரிசனமிக்க அரசியலறிவு வாய்நதவரவர்.

தமிழரசுக் கட்சி உதிர்த்து ''சுதந்திரன் ' எனும் பத்திரிகை பொறுக்கிக் காய்ந்த சொற்கள் அநேகம். அவற்றுள் ''உதிரி,, என்பதும் ஒன்று. சுயேச்சை அபேட்சகர்களை உதிரி என்று அழைப்பதில் அதற்கொரு ஆனந்தம் திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களை அவ்வடைமொழி கொடுத்து அழைத்தபோது, அதனைப் பார்த்துவிட்டு அன்னார் கூறியதில் எவ்

வளவு அரசியல் கருத்து இருந்ததென்பதைப் பாராட்டாது விடமுடியாது'

''மக்களின் தேவைக்கேற்பவே சமூகம் விருத்தியடைகின்றது. சமூகத்தின் விருத்திக்கேற்பவே அரசியல் விரிவடையவேண்டும்.'' ஓர் கிராம சீவியத்தோடு கூடிய ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டி) அபிவிருத்திக்கேற்பவே அரசியல் வாதியும் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். தன் வீட்டைக் கவனியாமல் பிறர் வீட்டைக்கவனிக்கப் போனால் என்ன நடக்குமென்பது நீங்கள் அறிந்ததே! அதேபோல், நமது தொகுதியைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும், இதன் அபிவிருத்தியை ஏனைய தொகுதியொன்றின் அபிவிருத்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்படிப்பார்க்கும்போது நமதுதொகுதியின் அடிப்படைத் தேவைகளைக் கூட நாம பெறாது இருப்பது புலனாகும். இந்த இலட்சணத்தில் நாம் ஒரு கட்சியில் சேர்வதிலும் பார்க்க நமக்காக ஓர் கட்சியை ஆக்கிக்கொள்வது சாலச் சிறந்தது அதைவிட நான் பெரிய அரசியல்மேதை, அரசியல் கட்சியின் அகில இலங்கைத் தமிழன் என்று தம்பட்டம்டிப்பதில் என்ன கிடைக்கப் போகின்றது',

இதெல்லாம் சிலுசிலுப்பு, வெறும் புகழ். ஆதலால்தான் உதிரிகளைப்பற்றி ஊதாரிகள் கூறுவதை நான் செவிமடுப்பதில்லை. அவன்



புளித்த எப்பக்காரன். நாமோ பசிக்கொட்டாவி விடுபவர்கள் என்றார்.

இவற்றில் எவ்வளவு அரசியற் தத்துவம் இருக்கின்றது என்பதைக் கவனித்துப் பாருங்கள். இன்று நமது தொகுதி சுயேச்சையான அங்கத்தவர் அல்லது கட்சிக்காரர் ஆளும் கட்சிக்கு உதவியிருந்தால் எவ்வளவு அபிவிருத்தியடைந்திருக்கும். ஆனால் இன்றே!

நமது பாதைகளின் நிலை என்ன?
அவை நரகத்துக்குப் போகும் வழிகள்!!

பாடசாலைகளின் நிலை என்ன?
அவை அரசியல் நாடக மன்றங்கள்!!

மக்களின் நிலை என்ன?
ஏதோ பெரிய மரத்தைச் சுற்றிய பல்லிகள் மாத்திரம் வாழ்கின்றன.
சுற்றுள புலிகளெல்லாம் காட்டில் சஞ்சரிக்கின்றன.

சுகாதார, வைத்திய வசதிகள்?
அப்பாடா! என்றென்றைக்கும் பதினாறு வயது மார்க்கண்டேயன்தான்.

இவைகள் யாவும் கண்முன் காணும் உண்மைகள்.

இன்னும் திரு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் ஓர் அரசியல்வாதி என்பதற்குப் பல உதாரணங்கள் தரத் தேவையில்லை. ஒன்றை மாத்திரம் கூறி வைக்கிறேன்.

முன்னை நாள் கல்வி மந்திரி திரு. டபிள்யூ தகநாயகா அவர்கள் ஒரு தடவை ஒரு புதுப் பாடசாலை பதிவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக அப்பாடசாலையைத் தரிசித்தார். அருகருகே பாடசாலைகளிருந்ததால், அப் புதுப் பாடசாலை அவசியமா என்பது முக்கியமான தடையாக இருந்தது. கலாநிதி தகநாயகா அவர்கள் இதையே எதிர்மன்னசிங்கம் அவர்களிடம் கேட்டார். அவர் பதில் கூறவில்லை. உடனே பக்கத்திலிருந்த காரின் ஹாரனைப் பலமாகத் தொடர்ந்து அழுத்தினார். காதடைக்கும் சத்தமாகத் தொடர்ந்து ஹாரன் ஒலித்தது. சில விநாடிகள்தான் தாமதம் காரைச் சுற்றி அனேகம் சிறுவர்கள் குழுமிவிட்டனர். அவர்களை மந்திரியவர்களுக்குக் காட்டி, ஐயா இவர்கள் எப் பாடசாலையிலும் கல்வி கற்காதவர்கள்; இன்னும் இருக்கிறார்கள். அவர்களின் காதில் ஹார்ன் சத்தம் எட்டவில்லை என்றார்.

ஆ! ஆம் என்னை மன்னித்துக் கொள் எதிர்! இன்னுமொரு படசாலையைக் கட்டுவியும். பதிந்து தருகிறேன். எனக் கூறிப் பாடசாலையைத் தரிசிக்காமலேயே, பக்கத்தில் நின்ற கல்



வியதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு விட்டுத் திரும்பினார்.

இவ்வாறு சமயோசிதமாகக் காரியங்களை ஆற்றுவதில் கை தேர்ந்த அரசியலறிஞராக விளங்கினார்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்கு மூடுவிழா நடாத்த அரசாங்கம் தீர்மானித்தபோது, தமிழரசார் எடுத்த காவடி பலிக்காமல் போனமை யனைவருக்கும் தெரிந்த உண்மை. பின்னர் இவரின் தலைமையில் ஒரு காவடி எடுக்கப்பட்டுக் கல்வி மந்திரியைப் பேட்டி கண்ட போது தமிழாசிரியர்கள் தொகை அதிகம். மேலும் தொடர்ந்து கலாசாலை இயங்கினால் நேரிடப் போவது வேலையில்லாத் திண்டாட்டம். ஆதலால் மூடுவதுதான் புத்திச்சாலித்தனமென்று மந்திரியவர்கள் பழைய பல்லவியைப் பாடினார்கள். ஆனால் பல்லவியை அனுபல்லவியாக மாற்றினார் இவர். அதாவது பயிற்சிக் கலாசாலை பயிற்சி அளிப்பதற்காகவன்றி வேலை கொடுக்கவல்லவே! இன்னும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பல ஆயிரம் பேர் இருக்கின்றார்களே அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகத் தொடர்ந்து நடாத்துங்கள் என்றார்.

அடுத்த சரணம் சரி வந்தது. ஆசிரிய கலாசாலை தப்பிப் பிழைத்தது. தமிழரசார் தலையிட்

டபடி முடிவு வந்திருந்தால், ஆசிரிய கலாசாலை அதோ கதியாகி இருக்கும். சத்தியாக்கிரகத்துக்குப் பயந்து மட்டக்களப்புக் கச்சேரி உகனைக்கு இடம் பெயர இருந்தது. ஏதோ! தமிழ் மக்கள் செய்த தவப்பயன் தலையோடு வந்தது, தலைப்பாகையோடு போயிற்று.

அன்னாரின் அரசியல் கருத்துகள் சில;

1. அரசியல்வாதி! அனைவருக்கும் பொதுவானவன் விசேடமாகத் தன் தொகுதியில் உள்ள ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளருக்கும் அவன் ஒரு நண்பன்.

2. பட்டிருப்புத் தொகுதியைப் பொறுத்த அளவில் தனி ஒரு சமாத்தியமுள்ள அரசியல் கொள்கை வேண்டும். வடக்கிலிருந்து வரும் அரசியல் கருத்துக்களுக்கு இங்கே இடமளிக்கப்பட்டால் இது ஓர் அரசியல் பாலைவனமாகிவிடும். அவர்களுக்கு வாழ்க்கைவசதிகள்எல்லாமுண்டு. நமக்குவேண்டியது வாழ்க்கை வசதிகள். அவாகளுக்கு வேண்டியது தனியரசு.
3. பட்டிருப்புத் தொகுதியின் எதிர்காலம் மிகவும்இருள் சூழ்ந்ததாக இருக்கின்றது.ஏனெனில், பிரதிநிதியானவுடன் உருவாவது எதிர்ப்பிரசாரம்.நல்லதோ, தீயதோ, மறுவேட்பாளரின் கொள்கை அவற்றை எதிர்ப்பது. இது ஒரு பொழுதுபோக்கு கூட, இதனால் மக்கள் படும்பாடு அநேகம்! அநேகம்!



4. பட்டிருப்புத் தொகுதியின் கேந்திரஸ்தானம் களுவாஞ்சிகுடி. இது எதிர்காலத்தில் ஒரு நல்ல பட்டினமாகத் திகழும் ஆனால் அதன் முன்னேற்றம் அரசியல் கட்சி ஆதரவாளர்களினால் தடைப்படுகின்றது. இங்கேதான் பட்டிருப்புத்தொகுதியின் ஒடுக்குமுறை நிகழ்கின்றது, இதுமாறி இவ்விடம் ஒரு பட்டினமாக மாறிப் பட்டிருப்புத் தொகுதியைப் பெலப்படுத்தவேண்டும்.

மொழிப் பிரச்சினை சம்பந்தமாக அவரின் அரசியல் கருத்துகள் பின்வருமாறு:

1. தமிழர் மிகவும் ஆத்திரப்பட்டு விசயத்தைக் தைக் கருகலாக்கிட்டனர். ஆங்கிலத்தை அகற்றி விட்டு அவ்விடத்தில் சிங்களத்தை வைத்திருக்கும் அளவுக்காவது நாம் விசயத்தில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆங்கிலத்தில் இருக்கும் நம்பிக்கை நமது சகோதர மொழியான சிங்களத்தில் இல்லாமற்போனதற்குக் காரணம் என்னவென்றுதான் எனக்குத் தெரியவில்லை. தமிழராகிய நாம் சிங்களவரின் இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்வோம் என்பதைச் சிந்திக்க மறந்து விட்டோம். தமிழர் படையெடுப்பினால் அவதியுற்ற மக்கள் சிங்கள மக்கள். அவர்கள் இன்று பயப்படுவது தமிழர்களுக்கு. மடியில் நெருப்பை அள்ளிக் கட்டிக் கொண்டது

போல் இருக்கின்றார்கள். அதே நேரம் நாம் சுடு நெருப்பு என்பதைக் காட்டினால், அவர்களுக்கு என்னதான் வராது? இதே நேரம் தமிழ் ஆட்சி செய்யும் சென்னை மாகாணத்தில் முத்திரையில் இந்தியும், ஆங்கிலமும் காசுத் தாளிலோவென்றால், இந்தியும், ஆங்கிலமும்தான். இங்குள்ள முத்திரைகளிலும் காசுத் தாள்களிலும தமிழ் இடம் பெற்றிருப்பதைக் காணும்போது எவ்வளவு ஆறுதல் ஏற்படுகின்றது தெரியுமா?

2. மொழிப் பிரச்சினையை இன்று அரசியல் பகடைக்காயாக்கிவிட்டார்கள். பலர் நாடாளுமன்றத்துள் நுழைய இது நல்லதொரு ஏணியாக இருக்கின்றது மக்களைக் கவர்ந்து இழுக்கும் ஒரு மாய வித்தைதான். ஆனால் இது ஒரு அபாயகரமான காரியமாகும். இது இல்லாவிட்டால் எத்தனையோ பேர் நாடாளுமன்றத்துள் நுழையமுடியாது தெரியுமா? காலகெதியில் இம்மொழிப் பிரச்சினையை உண்டாக்கியவர்களை அப் பிரச்சினையே அடித்து முறித்துவிடும் நாட்டில் இப் பிரச்சினையில்லாமல் மக்கள் சுபீட்சமாக வாழ்வார்கள் இது திண்ணம.

3. தமிழர்கள் தமிழை வளர்க்க முன்வர வேண்டும். நம் பண்பட்ட மொழியைக் காக்க அரசாங்கத்திடம் சலுகை வேண்டக் கூடாது. ஆங்கிலம் அரசாங்க மொழியாகியபோதும்



இப்போதுள்ள நிலை தமிழுக்கு ஏற்படவில்லை. அரசினர் உதவியில் தங்கியிருப்பின் இந்நிலை தவிர்க்கமுடியாததொன்று.

4. முன்னர் உத்தியோகம் பெற ஆங்கிலக்கல்வி பயின்றோம். அதே கொள்கையுள்ளோர் சிங்களத்தைப் படிக்கவேண்டியதுதான் ஆனால் 'பிச்சை வேண்டாம், நாயைப்பிடி' என்றது போல் இன்று நாம் சிங்களத்தைப் படித்தாலும் தமிழர் என்ற காரணத்தால் உத்தியோகம் பெற முடியாது. அதாவது, மொழிப்பிரச்சினையை உருவாக்கியவர்கள் நாம். இன்று அது தீர்ந்தபாடில்லை. அதனால் ஏற்பட்ட பிரிவினையால் விளைந்த நோய்க்கு மருந்து தேடுகின்றோம்! காரணம் என்ன? நாடாளுமன்றத்துள் நுழைந்துவிடவேண்டுமென்ற பதட்டத்தில், சில பாதகர்களின் ஆலோசியாத முடிவு! பாடுபடுபவர்கள் ஒன்றுமறியாத நம்மக்கள்

இப்படியான அரசியலறிவுள்ள அனுபவசாலியாக இருந்ததால் சிறந்த அரசியல் தலைவர்களின் மத்தியில் மிகவும் மதிப்புள்ளவராக விளங்கினார், தேசபிதா டி.எஸ் சேனநாயகா அவர்கள், அன்னாரின் புதல்வர் டட்லி, இராணுவவீரரும், மூன்றாம் பிரதமருமான சேர். ஜோன், கொத்தலாவல என்பார் மெச்சக்கூடிய அளவுக்கு ஒரு பிரதான அரசியல்வாதியாக விளங்கினார் என்றால் இன்னும் கூறவேண்டிய அவசியம் இல்லையல்லவா?

# 3ம் அதிகாரம்.



# ஜனநாயகவாதி.

பாராளுமன்றத்தின் 1965ம் வருடப் பொதுத்தேர்தலில் இவர் போட்டியிட்டுத் தோல்வியுற்றுச் சில மாதங்கள் கூட ஆகவில்லை. ஒரு நாள் பின்னேரம் நான் இவரது வீடு வர நேர்ந்தது. அங்கே இவரை ஆறு ஆசிரியர்களும், இன்னும் சிலரும் சூழ்ந்து கொண்டிருந்தனர். அங்கே நின்ற ஆறு ஆசிரியர்களினதும் முகத்தில் ஒரே சோகம். அங்கே ஒரே துக்க அமைதி. என்னதான் கேடுநேர்ந்துவிட்டதென அறியும் ஆவலுடன் விசாரித்தேன்.

அந்த ஆளின் கையில் துப்பாக்கி இருந்தால். சுட்டு விட்டிருப்பார் போலிருக்கிறது! இப்படி



செய்வதிலும் பார்க்கச் சுட்டு விட்டிருந்தால் கூட நல்லதாக இருந்திருக்கும். சுதந்திரம் என்று தோள்தட்டிப் பேசுகின்றனர். பேச்சுச் சுதந்திரம். எழுத்துச் சுதந்திரம். சமயச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம். என்றெல்லாம் ஜனநாயகம் பேசுகின்றனர். சிறுபான்மையோரைக் காப்பதுதான் ஜனநாயகம் என்கின்றனர். இப்படியெல்லாம் கூறியவர்கள் பழி வாங்கும் படலத்தை ஆரம்பித்து விட்டனர். இந்த ஆறு ஆசிரியர்களும் எனக்கு ஆதரவு அளித்ததாக நாடு கடத்தப் பட்டுள்ளனர் அதாவது கஷ்டமான, தூரவிடங்களுக்கு இடமாற்றம். இதுவா ஜனநாயகம! இதுவா ஜனநாயக வாதியின் கடமை? இதுதானா தமிழ் மக்களுக்காக உயிர் விடத் துடி துடிப்பவர்களின் கடமை. நான் பல தடவைகள் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்துள்ளேன். பல தடவைகள் தோற்றுமுள்ளேன். நான் எதைச் செய்யச் சொன்னாலும் ஆளும் கட்சி உடனே செய்யுமளவுக்குச் செல்வாக்குடன் இருந்துள்ளேன். என்னை பலர் நேரில் கூடத் தயவாகப் பேசியுள்ளனர் இப்படியான அற்பத்தனமான செயலை நான் என்றுமே செய்ததில்லை. பழி வாங்கும் அற்பனாக நான் இருந்ததில்லை. பல ஆசிரியர்களை எனக்கு ஆதரவு அளிக்காத காரணத்தைக் கொண்டு பல மைல்களுக்கு அப்பால் துரத்தவுமில்லை, எதிரியே இருக்கக் கூடாது என்ற

எண்ணமா? எதிரியே இல்லாமலிருக்க எதிர்த்து வாக்களித்தோரை நசுக்குவது எவ்வளவு பேடித் தன்மான செயல். எதிர்ப்போருக்கு நன்மை செய்தல்லவா தன் பக்கம் இழுக்க வேண்டும். மாற்றப் பட்டவர்கள். இனிமேல் தனக்கு ஆதரவாகப் பயந்து நடுங்கி அடுத்த தேர்தலில் வாக்களிப்பார்களென்ற எண்ணமா?

அடுத்து இந்த அறுவருந்தானு எனது ஆதரவாளர்கள்! என்ன புத்திசாலித்தனம் என்ன ஜனநாயகவாதிகள் என்று அலுத்துக்கொண்டார். இந்தக் கதாநாயகன் யாரென்பதற்குப் பல ஆதாரங்கள் அளித்துள்ளேன். கதாநாயகன், ஜனநாயகவாதி, யார் என்பதை உங்கள் கவனத்திற்கே விடுகிறேன், உண்மைதான் எத்தனையோ எதிரிகளுக்கு தன்னிடம் வந்தபோது எவ்வித சரணுகதி நிபந்தனையுமின்றிப் புன்முறுவலுடன் கடந்ததைக் கனவாக எண்ணிப் பணியாற்றினுர். இவர் தனது தொகுதியின் பொதுவான பிரதிநிதி என்ற அளவில், எதிர்த்து வாக்களித்தோர் நெருங்கினுல், பழைய புராணம் பாடி, பழி வாங்கும் படலம் பாடி, உதவி செய்கின்றவர்களோடு திரு.எதிர்மன்னசிங்கம் அவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பின் அன்னுர் எவ்வளவு ஜனநாயகத்தை மதித்தவர் என்பது புலனுகும் அல்லவா?



பொதுத் தொண்டு செய்யப் புகுந்துவிட்டால் எனது ஆதரவாளர்களுக்கு, உறவினருக்கு, மற்றவர்களுக்கு எனப் பார்த்து உதவி செய்ய முடியாது ''நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவது' போல எனது ஆதரவாளர்கள் உதவி பெற வேண்டுமே தவிர எதிரிகள் மிதிபட நடப்பது ஜனநாயகத்துக்கு முரணுன செயலாகும், நான் என் ஆதரவாளர்களுக்கு மாத்திரம் பிரதிநிதியாக இருந்ததில்லை. பட்டிருப்புத் தொகுதி மக்கள் அத்தனை பேரினதும் பிரதிநிதியாகத்தான் இருந்திருக்கிறேன். ஆனுல் அரசியலறிவு குறைந்த சிலர் என்னைத் தங்கள் பிரதிநிதியாகக் கொள்ளவில்லை. அதற்கு நான் என்ன செய்வது எனக் கூறிய இவர் ஒரு ஜனநாயகவாதியல்லவா?

ஒரு கிராமச்சபைத் தலைவர் தேர்தலில் திரு.எதிர்மன்னசிங்கத்தின் ஆதரவாளர் தோல்வியுற்று விட்டார். சில மாதங்களின் பின் ஆளும் கட்சி அங்கத்தினர் சிலர் தலைவரில் அதிருப்தியடைந்து எதிர்கட்சிக்கு வந்துவிடும் நிலைமையேற்பட்டு விட்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தலைவர் தேர்வில் தோற்ற தன் ஆதரவாளரைத் தலைவர் ஆக்கியிருக்கலாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் ஆனுல் இதனை இவர் சம்மதிக்கவில்லை' அவர் கூறிய பின்வரும் காரணங்கள் ஒரு ஜனநாயகவாதிக்குரிய முழு இலட்சணங்களையும் காட்டும் வகையில் அமைந்துள்ளன அவை;-

1. இவ்வாறு தலைவர்களை அடிக்கடி மாற்றியமைப்பதால்கிராமச் சபை நிர்வாகம் சீர் கெட்டுவிடும்.

2. இவ்வாறு தீய சக்தியைப் பாவிப்பதால் ஜனநாயகமே அழிந்து விடும். இவ்வாறான தீய செயலகள் வளர இடமளிக்கக் கூடாது.

இவர் தோற்றபின் இவருடைய ஆதரவாளர்களால் தேர்தல் மனுத் தாக்கல்செய்யப்பட்டதுண்டு அங்கும் அவர் ஜனநாயக அடிபடையில்தான் அதனைச் செய்தார். மிகவும் நோய் வாய்பட்டு வைத்திய சாலையில் இருந்துகொண்டே தேர்தலை நடாத்தியவேளைகளில் நடந்த அராஜகமான கருமங்களால் சில நம்பிக்கை மோசடிகள் நடந்திருக்கக்கூடுமென்று ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட சலசலப்புகள் இதற்கு மூலக்கருவாக அமைந்தன. ஆரம்ப மனுவின் இவர் ஆதரவளித்தாலும் கடைசி மனுவில் ஆதரவாளர்களின் கோரிக்கையைப் புறக்கணிக்க வேண்டி நேரிட்டது.

காலில் ஏற்பட்ட புண் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த



வேளையில் இவருடைய ஆதரவாளர்கள் ஒரு தடவை இவரைக் கிராமச்சபைத் தலைவராக்கி விட்டார்களென்றால் அதுவே அன்னாரின் ஜனநாயக விசுவாசத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறதல்லவா?

இவ்வாறு ஆயிரமாயிரம் சொல்லிக் கொண்டே போகலாம். அதனிலும் பார்க்கப் பொதுவாக இவரை ஒரு ஜனநாயகவாதி என அழைத்துவிட்டு அவருடன் பழகியவர்களைச் சாட்சியாக வைத்துவிட்டு அடுத்த அதிகாரத்துள் நுழைகிறேன்.



# 4ம் அதிகாரம்.



# கனவுகள்.

மனிதன் தனது வாழ்வில் பல கனவுகளைக் காண்கிறான். முழுவதும் நனவாவதில்லை. ஒரு சில நனவாகி விடுகின்றன. இன்னும் சில காலங் கடந்து நனவாகி விடுகின்றன. இவற்றுள் நன்மையான காரியங்களைப் பற்றிக் காணும் கனவுகள் என்றும் பாழ்போய் விடுவதில்லை. அவ்வாறு திரு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் கண்ட கனவுகள் ஆயிரமாயிரம். அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறேன்.



1. பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கிராமச்சபைகள் அதிக பரப்பைக் கொண்டவையாக இருக்கின்றன. எனவே இவற்றைப் பலகிராமச் சபைகளாகப் பிரிக்க வேண்டும். இதன் பேறாக உடனடியாகப் பின்வரும் பலன்கள் கிட்டும்:

    1. சமாதான நீதவான்களின் தொகை அதிகரிக்கும். கிராமச் சபைத் தலைவர்கள் சமாதான நீதிபதியாகும் முறையிருப்பதால் கண்டதற்கெல்லாம் மக்கள் பிரதிநிதியின் வீட்டில் காத்திருக்கவேண்டி ஏற்படாது.

    2. தங்களது கிராம நிர்வாகங்களைத் தாமே கவனித்து முன்னேறும் பயிற்சி அதிகமானோருக்குக் கிட்டும். இவ்வாய்ப்புத்தான் இன்றைய நம் தேவைகளை உணரவும், அவற்றைப் பூர்த்திசெய்யவும் வழிகாட்டும்.

2. பட்டிருப்புத் தொகுதி மட்டக்களப்பு வாவியால் பிளவுபட்டிருப்பதால் பாலங்கள் மூலம் அவை இணைக்கப்பட்டு கரை வித்தியாசம் அகற்றப்படவேண்டும். இவற்றில் பட்டிருப்புப் பாலம் இவரது காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது இப்பாலத்தைக் கட்டுவித்தது நான், நான் என்று பலர் வாதா

டினாலும் திரு. தருமரெத்தின முதலியார் காலத்தில் சிந்திக்கப்பட்டு திரு. எஸ்.யூ எதிர் மன்னசிங்கம் அவர் காலத்தில் செயலாக்கப் பட்டது என ஹன்சார்ட் பத்திரிகை எடுத் துக்காட்டிச் சாட்சி கூறும்.

3. பட்டிருப்பு மகா வித்தியாலத்தை ஒரு மத் திய மகா வித்தியாலயமாக்க வேண்டும், எடுத் ததெற்கெல்லாம் பட்டணம் போகும் தொல் லை குறையும், இப்பகுதியிலுள்ள ஏழைப் பிள்ளைகள் பயன்தரு கல்வியைப் பெறவும் முக்கியமான திட்டமாகும்.

4. மின்சார விநியோகத்தை வருடத்துக்கொரு கிராமமாகத் தொடர்ந்து விநியோகித்தல் (ஆனால்இது இன்று தவளைப்பாய்ச்சல்வேகத் தில் போவதைப் பார்த்தால் வயிற்றைப் புரட்டுகிறது.)

5. பின் தங்கிய பட்டிருப்புத் தொகுதியிலிருந்து தனிப்பட்ட முறையில் சலுகை அம்சத்தில் உத்தியோகம், உயர்படிப்பு, என்பவற்றில் முன்னேறுதல். ஆனால் இது சொந்தம் என் னும் பந்தத்தால் தடைபோடும் வேடிக் கையால் தடைப்படுவது கண்கூடு. பல தாரா தரங்கள் பெற்ற அல்லது விசேட சித்தி பெற்ற ஒரு விண்ணப்பக்காரரிருக்க அதற் குக் குறைவான தகைமையுடையவர் நியமனம்



பெறுவது இந்நோய் பிடித்த படியாலா? என்றுதான் நினைக்கத்தோன்றுகிறது. இந்தப் பூசலால் மூன்றும் கட்சியாளன் நுழைந்து கொள்வதும் இங்குள்ள ஒரு பெரும் அரசி யல் வியாதியாகும்.

6. பிரதிநிதியின் வீட்டிற்குப் பொதுமக்கள்வரக் கூடாது. பதிலாக பிரதிநிதி பொது மக்கள் வீடுகளுக்கு அடிக்கடி செல்லவேண்டும். ஒரு வருக்கு ஒரு கஷ்டம் வந்ததை அவர் வந்து சொல்லி அறிவது அல்லது அவரிடம் ஏன் கஷ்டம் வந்தபோது என்னிடம் வந்து சொல் லவில்லை என்பது எல்லாம் ஒரு பொதுத் தொண்டனின் இலட்சணமில்லை.

எனவே ஆங்காங்கு விசாரணைச் சபைகளை நியமித்து பாராளுமன்றப் பிரதிநிதி செய்ய வேண்டிய காரியங்களை நிர்வகிக்க வேண்டும். இந்த விசாரணைச் சபையில் அரசியல் பேதம் இனம்-பேதம்-மதபேதமற்றவர்கள் அங்கத் தினராக இருக்கவேண்டும். இதனால் பிரதி நிதி அரசாங்கத்திடம் பெறவேண்டிய நன் மைகளை இலகுவாகப் பெறலாம். இப்போது ஒரு காரியத்தைச் செய்துமுடிந்ததும் அது இல மக்களின் வெறுப்புக்குரிய காரியமாயி ருப்பதால் அக்காரியத்தின் மீது பல காலம் செலவிட வேண்டியிருக்கிறது. உதாரண மாக ஒருவரின் மாற்றத்துக்கு உதவிசெய்

தால் அவரை மாற்றவேண்டாம் என்று ஒரு பிட்டிசம் வருகிறது. இதில் எதற்கு நடபடிக்கை எடுப்பது என்று தெரியாது தவிக்க நேர்வதுமுண்டு.

6. தமிழர்களுக்கு என அரசாங்கம் ஒதுக்கும் நன்மைகளில் 99வீதம் வடபகுதிப் பிரதிநிதிகள் தட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். இந்த நிலைமாறி கிழக்கும் நன்மை பெற மக்களின் மனதில் ஒரு புத்துணர்ச்சி எழவேண்டும்.

இவ்வாறாகப் பல கனவுகள் அவர் மனதில் எழுந்தன அவை நனவாகும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை, அவரின் கனவுகள் நனவாகிபட்டிருப்புத் தொகுதிமக்கள் பல வாழ்வும் பெற்றுவாழ இறைவன் அருள் புரிவாராக.

## 1ம் பாகம் முற்றிற்று.



அதிக படங்களுடன்
விரைவில் வெளிவருகின்றது
2ம் பாகம்.

பிரசுரமும். கிடைக்குமிடமு

# ஜீவா பதிப்பகம்

பிரதான வீதி, தேற்ருத்திவு
களுவாஞ்சிகுடி த.நி.

# JEEVA PUBLISHERS.

Main Street, THETATIVU
Kaluwanchikudi. P. O.